புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • டிசம்பர் 12, 2024 • புரட்சி 24 • முழக்கம் 49 • விலை ரூ.3.00

## விஸ்வகர்மா குலத்தொழில் திட்டத்துக்கு அரசு பதிலடி

# ஜாதியற்ற கைவினைத் திட்டம்!

**ஒன்றிய ஆட்சியின் குலக்கல்வித் திட்டமான விஸ்வகர்மா திட்டத்துக்கு பதிலடியாக கலைஞர் கைவினைத் திட்டத்தைத் தமிழ்நாடு முதல்வர் அறிவித்துள்ளார்.**

ஒன்றிய ஆட்சியின் ‘விஸ்வகர்மா’ குலத் தொழிலுக்கு மீண்டும் உயிரூட்டுவது; பாரம்பரிய தொழில் செய்தவர்களாக இருக்க வேண்டும். பாரம்பரிய தொழில் கருவிகளைப் பயன்படுத்துவோராக இருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் சமூகமாக இருக்க வேண்டும் என்று இந்தத் திட்டத்துக்கு நிபந்தனை விதித்தது ஒன்றிய ஆட்சி.

ஜாதித் தொழிலைப் பரம்பரையாகச் செய்வோர் மட்டுமே இதில் பயன்பெற முடியும். அதுவும் படிப்பைத் தொடரவிடாமல் 18 வயது நிரம்பியவர் விண்ணப்பிக்கலாம் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. ராஜகோபாலாச்சாரி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்துக்கு உயிரூட்டும் இந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு எதிர்த்தது. பாரம்பரியத் தொழில் செய்தவர்கள் சான்றிதழ் கேட்கப்படுவதால் ஜாதியை அடிப்படையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தைச் சமூகநீதி அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர், பிரதமருக்குக் கடிதம் எழுதினார். இப்போது தமிழ்நாடு அரசே சமூகநீதி அடிப்படையில் ஜாதி அடையாளத்தை நீக்கி கைவினைஞர் திட்டத்தை அமல்படுத்தி அதற்கு கலைஞர் கைவினைஞர் திட்டம் என்று பெயர் சூட்டியுள்ளது. பாரம்பரியமாக ஜாதி அடிப்படையில் தொழில்களுக்கு ஜாதி அடையாளமின்றி அனைத்து ஜாதியினரும் பயன்படும் திட்டமாக இது மாற்றப்பட்டுள்ளது. இளமையிலேயே இந்தத் திட்டத்துக்கு தள்ளிவிடாமல், வேறு வேலைவாய்ப்புகள் கிடைக்காத நிலையில் உள்ளோர் பயன்படும் வகையில் வயது வரம்பு 35 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் எந்த ஜாதியாகவும் இருக்கலாம். ’பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற முழக்கத்தோடு இந்தத் திட்டத்துக்கான அரசு விளம்பரம் ஏடுகளில் வெளிவந்துள்ளது.

இதேப்போல தூய்மைப் பணியாளர்களை அத் தொழிலிலிருந்து விடுவித்து தொழில் முனைவோர்களாக மாற்றும் திட்டத்தையும் ‘திராவிட மாடல்’ அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 213 தூய்மைப்பணியாளர்களுக்கு ’நவீன கழிவுநீர் அகற்றும் வாகனம்’ வழங்கும் திட்டத்தையும் தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

நகை செய்தல் - முடி வெட்டுதல் - துணி நெய்தல் - துணிகளில் கலை வேலைப்பாடுகள் - கூடை முடைதல் - கயிறு பாய் பின்னுதல் - துடைப்பான் செய்தல் - மண்பாண்டங்கள் - கடுமண் வேலைகள் - பொம்மை தயாரித்தல் - துணி வெளுத்தல், தேய்த்தல் ஆகியத் தொழில்கள் இத்திட்டத்தில் அடங்கும்.

# அம்பேத்கர் பிறந்தநாளில் ஜாதி எதிர்ப்பு உறுதி ஏற்பு

**சென்னை:** புரட்சியாளர் அம்பேத்கர் 68ஆவது நினைவுநாளை முன்னிட்டு சென்னை மாவட்டக் கழக சார்பில் அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதற்குக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

மேலும் மயிலாப்பூரில் உள்ள அம்பேத்கர் சிலைக்கும் முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது. கலந்து கொண்ட தோழர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இதில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வட சென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி மற்றும் கழக இளைஞரணி - மாணவரணி உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் 68ஆவது நினைவுநாளை முன்னிட்டு அவரது சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டன.

### கள்ளக்குறிச்சியில் சட்ட எரிப்பு நாள் கூட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக சார்பில் வாணாபுரம், பாக்கம் கிராமத்தில் 1957 ஜாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளைக் கொளுத்திய போராளிகளின் தியாகத்தை நினைவு கூறும் தெருமுனைக் கூட்டம் தே.ஆ.ராமச்சந்திரன் தலைமையில் 26.11.2024 அன்று நடைபெற்றது.

ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் இரா. கார்மேகம். ரிஷிவந்தியம் ஒன்றியத் தலைவர் மா.குமார். வா.பிரபு மு.நாகராஜ் அ.பாரதிதாசன் சி.ஆசைத்தம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மு. நாகராஜ், ஏதுசாமி பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினார்கள். ஓவியா கவிதையை வாசித்தார்.

கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், மாவட்டத் தலைவர் க.மதியழகன், மாவட்டச் செயலாளர் இராமர்,மாவட்ட அமைப்பாளர் சாமிதுரை, அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ.முருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சா.நீதிபதி நன்றி கூறினார். கொட்டும் மழையிலும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கூட்டத்தைக் கவனித்தனர்.

நிகழ்வுக்குக் கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலை வகித்தார்.

நினைவேந்தல் நிகழ்வில் கழக சமூக வலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன், கழகப் பொருளாளர் சு.துரைசாமி ஆகியோர் அம்பேத்கர் குறித்த செய்திகளை பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை மாவட்டத் தலைவர் முகில் ராசு ஒருங்கிணைத்தார். நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாநகரத் தலைவர் தனபால், மாநகரச் செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர் முத்து, தெற்கு பகுதிப் பொறுப்பாளர் இராமசாமி, மாநகர துணைத் தலைவர் மாரிமுத்து, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், ஸ்ரீஜா, கார்த்திக், சூர்யா, யாழினி, திராவிடர் கழகத்தின் பெரியார் படிப்பகப் பொறுப்பாளர் மைனர் ஆகியோர் பங்கேற்றனர்.

**சேலம் மேற்கு:** சேலம் மேற்கு மாவட்டக் கழக சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் 68ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி, மேட்டூர் அச்சங்காட்டில் உள்ள அவரது சிலைக்கு சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

இந்த நிகழ்வில் தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈசுவரன், சக்திவேல், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன், கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சுதா, சேலம் மாவட்ட இளைஞரணி செயலாளர் பிரபாகரன், மேட்டூர் நகரச் செயலாளர் குமரப்பா, R.S.பகுதி செயலாளர் விவேக், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திவாகர் மற்றும் மேட்டூர், கொளத்தூர், மேட்டூர் R.S, நங்கவள்ளி, காவலாண்டியூர் பகுதித் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம் கிழக்கு:** சேலம் கிழக்கு மாவட்டக் கழக சார்பில் மாவட்டச் செயலாளர் டேவிட் தலைமையில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சேலம் தோழர்கள் பாலு, தேவராஜ், ஆனந்தி, பிரபு, வெற்றி முருகன், அருள் காந்தி, நந்தகுமார், ஏற்காடு பெருமாள், செல்வம், தேவா, இளம்பிள்ளை ரமேஷ், தங்கதுரை, திவ்யா, கோபி, சதாசிவம், சௌந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோவை:** புரட்சியாளர் அம்பேத்கரின் நினைவுநாளை முன்னிட்டு காந்திபுரம் பெரியார் சிலை முன்பு அமைக்கப்பட்ட அம்பேத்கர் படத்திற்கு இரத்தினபுரி சதிசு தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**கள்ளக்குறிச்சி:** புரட்சியாளர் அம்பேத்கரின் நினைவுநாளை முன்னிட்டு கடுவனூரில் அம்பேத்கர் படத்திற்கு ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் இரா.கார்மேகம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மேலும் சங்கராபுரத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் மு.நாகராஜ் கு.பாபா. இரா.வீரமணி ஏ.ஜெயப்பிரகாஷ், மா.குமார் ரி.வ.ஒ.தலைவர் ராஜேஷ், கலையரசன், சந்தோஷ், சு.வல்லரசு, கி.ஆனந்தன், மு.பால்கி மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தோழர்கள் 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.


### கழக நாட்காட்டி தயாராகிறது!




• 2023 - வேத மத எதிர்ப்பாளர்கள் சிறப்பு நாட்காட்டி

• 2024 - தமிழ் - தமிழருக்கு தொண் டாற்றிய வெளிநாட்டவர் சிறப்பு நாட்காட்டி

• 2025 நாட்காட்டியில் திராவிட இயக்க கவிஞர்கள் நினைவு கூரப்படுகிறார்கள். வண்ணப் படங்களாக..

• விலை ₹75/-

முன்பதிவிற்கு
தபசி குமரன்,
தலைமை நிலையச் செயலாளர்.
தொடர்புக்கு : 9941759641

**தலையங்கம்**

# இதுதான் புதிய அரசியலா?

ஜாதி ஒழிப்புப் போராளி புரட்சியாளர் அம்பேத்கர் நினைவுநாளான டிசம்பர் 6, 1992இல் தான் அயோத்தியில் பாபர் மசூதியை மதவாத சக்திகள் இடித்தனர். 2024, டிசம்பர் 06இல் அம்பேத்கர், தி.மு.க. கூட்டணி உடைப்புக்குப் பகடைக் காயாக உருட்டப்பட்டுள்ளார். இது அம்பேத்கருக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பு என்றே வேதனையுடன் பதிவு செய்கிறோம்.

'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' நூல் வெளியீட்டு நிகழ்வு, சென்னையில் 'விகடன் குழும' சார்பில் நடைபெற்றது. நிகழ்வில் பேசிய தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா இருவரும், அதைக் கூட்டணி அரசியல் மேடையாகச் சுருக்கி விட்டார்கள்.

மக்களைக் குழப்பும் சில சொல்லாடல்கள் வலம் வருகின்றன. ஒன்று 'பிறப்பின் அடிப்படை' மற்றொன்று 'கருத்தியல்'; தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் முதல்வராகவும், உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராகவும் இருப்பது 'பிறப்பு அடிப்படையிலான' மன்னர் அரசியலாகக் குற்றம்சாட்டுகிறார்கள். 'பிறப்பு அரசியல்' ''மன்னர்'' என்ற சொற்றொடரின் உள்ளடக்கத்தை ஆராய்ந்து பார்க்காமல் திட்டமிட்டு செய்யப்படும் திரிபுவாதம் இது.

'வர்ணாஸ்ரமம்' பிறப்பு அடிப்படையில் சமூகத்தைக் கூறுபோடுகிறது. 'பிராமண' – 'சூத்திர' பாகுபாடுகளைப் பிறப்பின் அடிப்படையில் கட்டமைக்கிறது. அம்பேத்கர் இந்த அமைப்பை அழித்து ஒழிப்பதே தனது முதன்மை இலட்சியமாகக் கூறினார். வாழ்நாள் முழுவதும் களமாடினார்.

பிறப்பின் அடிப்படையில் சமூகத்தை ஒடுக்கும் கருத்தியலையும், பிறப்பின் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட சமூகம் – அதை எதிர்த்துக் கிளர்ந்து எழுவதையும் ஒரே தட்டில் எடைபோடுவது அப்பட்டமான பார்ப்பனியம். வர்ணாசிரம சமூகக் கட்டமைப்பில் கடைநிலையில் தள்ளப்பட்ட ஒரு சமூகத்தில் இருந்து அதிகாரத்துக்கு வருவதை 'பிறப்பு அடிப்படையிலான' பார்ப்பனிய மேலாதிக்கப் பார்வையில் திரித்துக்காட்ட முயற்சி செய்கிறார்கள். முதல்வரும், துணை முதல்வரும் பிறப்பின் அடிப்படையில் புறந்தள்ளப்பட்ட சமூகத்திலிருந்து அதிகாரத்துக்கு வந்தவர்கள். பெரியாரும் – அம்பேத்கரும் பேசிய இந்துத்துவா எதிர்ப்பு அரசியல் களத்தில் நிற்கிறார்கள். சொல்லப்போனால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கூட 'பிறப்பின் அடிப்படையில்' ஒடுக்கப்பட்ட மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது தான். ஜாதி ஒழிப்பு இலட்சியத்தில் களத்தில் நிற்கிறது. பிறப்பு அடிப்படையை ஒழித்து கருத்தியல் அடிப்படையில் முதல்வரைக் கொண்டுவரப் போகிறோம் என்று பேசக்கிளம்பியிருப்பவர்கள், ஒரு கேள்விக்கு பதில் கூற வேண்டும். ''பிறப்பு அடிப்படை'' என்பதை இவர்கள் எந்தக் கருத்தியலோடு பார்க்கிறார்கள்? சங்கராச்சாரிகளின் கண்ணோட்டத்திலா? அல்லது அம்பேத்கர் கண்ணோட்டத்திலா?

அம்பேத்கர் கண்ணோட்டத்தில் தமிழ்நாடு முதல்வரும், துணை முதல்வரும் அதிகாரத்தில் இருப்பது ஒடுக்கப்பட்டோருக்கான அரசியல். பிறப்பின் அடிப்படையில் அடக்கத் துடிக்கும் பார்ப்பனிய அரசியல் அல்ல, பார்ப்பனிய எதிர்ப்பு அரசியல்.

மக்களிடம் சென்று வாக்குகளை வாங்கி, மக்கள் ஆதரவோடு அதிகாரத்துக்கு வந்தவர்களை, ''மன்னர்கள்'' என்று வெட்கப்படாமல் பேசுகிறார்கள். மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களாட்சியை நிறுவியது 'அரசியல் சட்டம்' அம்பேத்கர் அதை உறுதிப்படுத்தினார், இதில் 'மன்னர்' ஆட்சி வந்துவிட்டது என்று பேசுவது அம்பேத்கரையே அவமதிப்பதாகும்.

''தலித் மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு'' என்று பேசுகிறார்கள். சமூக அதிகாரத்தில் பங்கா? ஆட்சிப் பதவிகளில் பங்கா? இது அடிப்படையான கேள்வி. சமூகத்தில் காலம்காலமாக ஒடுக்கப்பட்டு கிடக்கும் மக்கள், கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் அதிகாரமயமாக்கப்பட வேண்டும் என்பதே அம்பேத்கர் பேசிய ஆட்சி அதிகாரம். சமூக சமத்துவத்தை வலியுறுத்தும் இந்தக் கருத்தியலை ''தேர்தல் கூட்டணிக்குள்'' சுருக்கி அதன் நோக்கத்தையே சிதைத்து வருகிறார்கள்.

ஜாதிக் கட்டமைப்புக்குள் தான் சமூகம் சுழன்று கொண்டிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தக் கட்டமைப்பைத் தகர்க்கும் போராட்டத்தில் படிப்படியாக நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

பொதுத் தொகுதியில் தலித் வேட்பாளரை ஏன் நிறுத்தவில்லை என்று கேள்வி கேட்கிறார்கள். இந்தக் கேள்வியை தி.மு.க.வை மட்டும் நோக்கிக் கேட்க முடியாது. இது அனைத்து அரசியல் கட்சிகளுக்குமான கேள்வியாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டின் முதன்மையான அரசியல் கட்சிகள் பொதுத் தொகுதியில் தலித் வேட்பாளர்களை நிறுத்தும் நிலையை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும் என்றால் சமூகத்தில் ஜாதியைப் பலவீனப்படுத்தும் எதிர்ப்பு இயக்கங்களைத் தீவிரமாக நடத்த வேண்டும். எந்த அரசியல் கட்சிகளும் அதற்குத் தயாராக இல்லை. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, பொதுத் தொகுதியில் வேட்பாளர்களை நிறுத்துவது மிகச்சிறந்த முன்னெடுப்பு தான். ஆனாலும், பொதுத் தொகுதியில் தலித் அல்லாத வேட்பாளர்களைத் தானே நிறுத்த முடிகிறது? ஏன் தலித் பிரதிநிதியை நிறுத்த முடியவில்லை.? அதற்காக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைக் குற்றம்சாட்ட முடியுமா? சமூகம், ஜாதிய மனப்பான்மையில் இருந்து விடுபடவில்லை என்ற கண்ணோட்டத்தில் தான் இதை அணுக வேண்டும்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுத் தொகுதியில் ஏன் தலித்துகளை நிறுத்தவில்லை என்று கேட்பதற்கும் முதன்மை அரசியல் கட்சிகள், பொதுத் தொகுதியில் 'ஏன் தலித் வேட்பாளர்களை நிறுத்தவில்லை' என்று கேட்பதற்கும் பதில் ஒன்று தான். சமூகம், ஜாதிப் பிடியில் இருந்து விடுபடவில்லை.

குடிமக்கள் அனைவரும் சமம் என்பதை உறுதி செய்யும் அரசியல் சட்டத்தையே எதிர்த்த காஞ்சி சந்திரசேகரேந்திர சரஸ்வதியை ''உண்மையான சாமியார்'' என்று புகழ் மாலை சூட்டுகிறார் ஆதவ் அர்ஜுனா. இதுதான் அம்பேத்கர் குரலா? உண்மையில் தி.மு.க. எதிர்ப்புப் பேசியதை விட சங்கராச்சாரி ஆதரவு கருத்துப் பேச்சுக்காக அவர் நீக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே நமது உறுதியான கருத்து.

இந்திய வரைபடத்தில் தமிழ்நாட்டின் தனித்துவத்தையும், வளர்ச்சியையும், முன்னேற்றப் பாதையில் கட்டமைத்து வரும் திராவிட மாடல் ஆட்சியை வீழ்த்த பார்ப்பனியம் சதித்திட்டங்களை அடுக்கடுக்காக நடைமுறைப்படுத்தி வருகிறது. மிஞ்சப் போவது தோல்வி தான்.

இயங்கியல் பார்வையோடு அணுக வேண்டிய சமூகப் பிரச்சனைகளைக் கூட்டணி அரசியலுக்காகக் கொச்சைப்படுத்துகிறார்கள். இது புதிய அரசியல் அல்ல, ஏமாற்று அரசியல்!

## டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை எதிர்ப்பது ஏன்?

மதுரை மாவட்டம் மேலூரில் டங்ஸ்டன் கனிமம் எடுப்பதற்கு ஆய்வுடன் இணைந்த சுரங்க குத்தகை உரிமம் வழங்குவதற்கு கடந்த ஜூலை 24ஆம் தேதி, மத்திய சுரங்கத் துறை அமைச்சகம் ஏல அறிவிப்பை வெளியிட்டது. டங்ஸ்டன் என்பது தங்கம் மற்றும் சில்வர் போன்ற ஒரு உலோகமாகும். இந்த உலோகங்கள் பளபளப்பான மேற்பரப்பைக் கொண்டுள்ளன. அழகுக்காகவும் பயன்படுத்தப்படலாம். இந்நிலையில் கடந்த நவம்பர் 7ஆம் தேதி வேதாந்தாவின் துணை நிறுவனமான இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்தை தகுதியான நிறுவனமாக ஒன்றிய அரசு தேர்வு செய்தது. அதன்படி, மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் உள்ள நாயக்கர்பட்டி கிராமத்தில் 5 ஆயிரம் ஏக்கர்(2,015.51 எக்டேர்) பரப்பில் டங்ஸ்டன் சுரங்கம் அமைய உள்ளதாக ஒன்றிய சுரங்க அமைச்சகம் செய்திக் குறிப்பில் உள்ளது.

இது அரிட்டாபட்டி உள்ளிட்ட 48 கிராம மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. உடனே அழகர்கோவிலில் 48 கிராமத்தினர் ஒன்றுகூடி அடுத்த தொடர் போராட்டத்தை நடத்த முடிவு செய்தனர். இயற்கை வளங்கள், மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தும், அதற்கான அனுமதியை ரத்து செய்ய வலியுறுத்தினர். இது தொடர்பாக கிராம சபைக் கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்க ஒப்பந்தம் வழங்கிய மத்திய அரசின் நடவடிக்கையைக் கைவிடுமாறு தமிழக முதல்வர் பிரதமரிடம் ஏற்கனவே வலியுறுத்தி உள்ளார். அரிட்டாபட்டியில் மீனாட்சிபுரம், கூலானிப்பட்டி, செட்டியார்ப்பட்டி, அ.வல்லாளப் பட்டி, சண்முகநாதபுரம், நடுவளவு, தெற்கு வளவு, எட்டிமங்கலம், கிடாரிப்பட்டி ஆகிய கிராமங்கள் முழுவதுமாக பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. டங்ஸ்டன் சுரங்கம் அமைந்தால் பல்லுயிர்ப் பெருக்க மண்டலமாக உள்ள அரிட்டாப்பட்டி அழியும்' எனப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கழிஞ்ச மலை, நாட்டார் மலை, ராமாயி மலை, அகப்பட்டான் மலை, கழுகு மலை, தேன்கூடு மலை ஆகியவை டங்ஸ்டன் கனிமத் தொகுதிக்குள் வருவதாக கூறப்படுகிறது. இதற்கிடையில் மேலூரில் அரிட்டாப்பட்டியை உள்ளடக்கிய பகுதிகளை தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர்ப் பெருக்க பாரம்பரிய தலமாக மாநில அரசு, கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிவித்தது. அதில், 'தமிழில் கல்வெட்டுகள், சமணர் படுகைகள், 2,200 ஆண்டுகள் பழமையான குடைவரைக் கோவில்கள், ஏழு சிறு குன்றுகளைத் தொடர்ச்சியாக இப்பகுதி கொண்டுள்ளது. இப்பகுதிகளில் 72 ஏரிகள், 200 இயற்கை நீரூற்றுக் குளங்கள் மற்றும் 3 தடுப்பணைகள் உள்ளதாகவும் 250 பறவை வகைகள் மற்றும் பல்வேறு உயிரினங்களும் வாழ்வதாக தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.


"உலக அளவில் சீனாவில் இருந்து சுமார் 80% டங்ஸ்டன் உற்பத்தி ஆகிறது. கடந்த 2023ஆம் ஆண்டு சீனாவில் இருந்து 63.76 மெட்ரிக் டன் டங்ஸ்டனை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இதன் மதிப்பு என்பது சுமார் 1.6 மில்லியன் டாலர்கள். அதாவது இந்திய மதிப்பில் 13 கோடி ரூபாய்க்கும் மேல் விலையாகும். இவ்வளவு குறைவான விலையில் டங்ஸ்டன் கிடைக்கும்போது, மதுரையில் ஐந்தாயிரம் ஏக்கர் நிலங்களுக்கும் அங்குள்ள மக்களுக்கும் ஒன்றிய அரசு இடையூறு ஏற்படுத்த வேண்டுமா? என்ற கேள்வியும் எழுகிறது.

இந்நிலையில் தமிழக சட்டசபை நேற்று கூடியது. இதில் டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக ரத்து செய்திடவும், மாநில அரசின் அனுமதியின்றி எந்த சுரங்க உரிமத்தையும் வழங்கக்கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தி பேரவையில் தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேறியது. மாநில அரசின் எதிர்ப்பை மீறி டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க முடியாது என்பது மக்கள் மனதில் நிம்மதியை ஏற்படுத்தி உள்ளது.

## வைக்கம் போராட்டம்

# வரலாற்றுப் புரட்டுகளுக்குப் பதில்

**மக்களைத் திரட்டி தீண்டாமைக்கு எதிராக நடந்த முதல் போராட்டம் வைக்கத்தில் தான் வெடித்தது. தலைமையேற்றவர் பெரியார். 1994ஆம் ஆண்டில் அங்கே நினைவகம் உருவானது. திராவிட மாடல் ஆட்சி ரூ.8 கோடி செலவில் புதுப்பித்துள்ளது. அதன் திறப்பு விழாவில் தமிழ்நாடு முதல்வரும், கேரள முதல்வரும் பங்கேற்கிறார்கள். திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி முன்னிலை வகிக்கிறார். வைக்கம் போராட்டம் பற்றி சில வரலாற்றுக் குறிப்புகள்.**



• வைக்கம் போராட்டத்தில் இரண்டு முறை சிறை சென்ற ஒரே தலைவர் பெரியார் மட்டுமே. முதலில் அருவிக்குட்டியில் ஒரு மாதம் சிறை; பிறகு திருவனந்தபுரத்தில் 4 மாதம் கடும் சிறை.

• பெரியாருக்கு முன் கைது செய்யப்பட்ட அனைவரும் அரசியல் கைதிகளாகவே நடத்தப்பட்டனர். பெரியார் மட்டுமே கிரிமினல் கைதியாக கடும் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

• பெரியாருக்கு சிறையில் சிறப்பு சலுகை எதுவும் தரப்படக் கூடாது என்று நீதிமன்றமே உத்தரவிட்டது. 24 மணி நேரமும் திருவனந்தபுரம் சிறையில் கை, கால்களில் விலங்குகளுடன் கிரிமினல் கைதிக்கான உடையோடு கழுத்தில் கைதி எண் பட்டை தொங்கவிடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். வைக்கம் போராளிகளில் ஒருவரான கே.பி. கேசவமேனன், 'பந்தனத்தில் நின்னு' என்ற நூலில் இதைப் பதிவு செய்திருக்கிறார். தனக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமைகள் குறித்து பெரியார் வெளிப்படுத்தவே இல்லை.

• வைக்கம் போராட்டக் களத்தில் 141 நாள்கள் இருந்தவர் பெரியார். அதில் 74 நாள்கள் சிறையிலும் 67 நாள்கள் போராட்டக் களத்திலும் தன்னை ஒப்படைத்தார்.

• பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் தான் தனக்கு உந்துதலைத் தந்தது; மகத் குளத்தில் தீண்டப்படாத மக்களைத் திரட்டி, நீர் எடுக்கும் போராட்டம் நடத்தக் காரணமாக இருந்தது என்று அம்பேத்கரே எழுத்து வழியாகப் பதிவு செய்துள்ளார்.

• திரு.வி.க. 'நவசக்தி' பத்திரிகையில் பெரியாரின் பங்களிப்பைப் பாராட்டி 'வைக்கம் வீரர்' என்று பட்டம் தந்தார்.

• பெரியார் களத்துக்கு வந்த பிறகு தான் அது மக்கள் போராட்டமாக வெடித்தது. திருவாங்கூர் சமஸ்தானம் அதிர்ச்சி அடைந்தது. திருவாங்கூர் மன்னர் இறந்தவுடன் பதவிக்கு வந்த மகாராணி, சாலைகளைத் திறந்து விட முடிவு செய்தார். ஆனால் பேச்சு வார்த்தையைப் பெரியாரோடு நடத்த திவான் விரும்பவில்லை. அவ்வளவு கோபம். ராஜாஜியை அழைத்து பெரியாரிடம் பேச மாட்டோம்; காந்தியை அழைத்து வாருங்கள் என்று கூறி விட்டார்.

• காந்தி சமரசம் பேச முன்வந்தபோது ஈ.வெ. ராமசாமி, வீதி உரிமையைத் தொடர்ந்து கோயில் நுழைவு உரிமைப் போராட்டம் நடத்தக் கூடாது என்று திவான் நிபந்தனை விதித்தார். அதைத் தொடர்ந்து காந்தி பெரியாரிடம் பேசினார். பெரியார் கோயில் நுழைவு உரிமைக்குப் போராடுவேன் என்றாலும் இப்போது 'வீதி உரிமை'யோடு நிறுத்திக் கொண்டு மக்களைப் பக்குவப்படுத்தி அடுத்த போராட்டத்துக்கு தயாராவேன் என்றார். அதைக் காந்தி திவானிடம் கூறினார். அதற்குப் பிறகு தான் மூன்று வீதிகளில் 'தீண்டப்படாத' மக்கள் புழங்குவதற்கு உரிமை கிடைத்தது.

• வைக்கம் வெற்றி விழாப் பொதுக்கூட்டம் 1925 நவம்பர் 29இல் வைக்கத்தில் நடந்தது. இந்த வெற்றி விழாவுக்குத் தலைமை தாங்கும் தகுதி படைத்த ஒரே தலைவர் பெரியார் என்று கருதி, பெரியாரை மட்டுமே அழைத்து தலைமை தாங்கச் சொன்னார்கள். அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரே தலைவர் பெரியார் மட்டுமே. மற்றவர்கள் அனைவருமே கேரளத்திலிருந்து போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தான்.

இந்த வரலாறுகளைப் புரியாமல் வாய்க்கு வந்தபடி பேசுவதா? இந்த வரலாற்றுச் செய்திகளை மறுக்க முடியுமா?

## நம்பூதிரிகளின் திமிர்

வைக்கத்தில் தீண்டாமையை நம்பூதிரிகளும் நாயர்களும் நியாயப் படுத்தினர். போராட்டத்தைக் கடுமையாக எதிர்த்தவர்களில் ஒருவர் தேவன் நீலகண்டன் நம்பியாத்திரி என்ற நம்பூதிரிப் பார்ப்பனர். காந்தி இவரை சந்தித்துப் பேச விரும்பினார். 'இண்டம் துருத்திமனை' என்ற இடத்தில் வாழ்ந்த இந்த நம்பூதிரி ஒரு நிலப்பிரபு. இவரது கட்டுப்பாட்டின் கீழ் 48 "பிராமணக்" குடும்பங்கள் இருந்தன.

காந்தி வைசியர் என்பதால் இவரைத் தனது வீட்டுக்குள் விட மறுத்த இவர், தனியாக ஒரு தாழ்வாரத்தை உருவாக்கிக் காந்தியுடன் பேசினார். அவர் காந்தியுடன் பேசிய கருத்துகள் பச்சையான பார்ப்பன வெறியை வெளிப்படுத்தின.

"முற்பிறப்பின் மோசமான கர்மாவின்படி நெருங்க முடியாத ஜாதியில் அவர்கள் பிறந்திருக்கிறார்கள்; எனவே அவர்களை அப்படித்தான் நடத்த வேண்டும்."

"கொள்ளையர்கள், குடிகாரர்களைவிட இவர்களை மோசமாக நடத்த வேண்டும்; இவர்கள் சட்டபடி குற்றவாளிகள் என்பதால் அவர்களை ஒதுக்கி வைக்க முடியும்; ஆனால் தீண்டப்படாதவர்களை சட்டம் தண்டிக்காத



நிலையில் எங்களிடம் நம்பிக்கையால்தான் தண்டிக்க வேண்டும். எங்களது ஆச்சாரியார்கள் இதைத்தான் எங்களுக்கு கற்பித்திருக்கிறார்கள்."

"எங்களால் தண்டனை பெறுவதற்காகவே அவர்கள் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்."

"இவர்கள் கோயில் வீதிகளில் நடக்க நீதிமன்றம் அனுமதித்தால் அந்தக் கோயில்களையே நாங்கள் புறக்கணித்து விடுவோம்" – என்று பேசினார், அந்த நம்பூதிரி.

(இந்த உரையாடல் முழுவதையும் சுருக்கெழுத்தில் எழுதி பதிவு செய்தவர் கிருகத்துவ அய்யர். இது ஆவணமாக இருக்கிறது. ஆதாரம்: பழ. அதியமான் நூல்)

# சிறையில் பெரியார்; களத்தில் நாகம்மையார்

பெரியாரின் இணையர் நாகம்மையார், சகோதரி கண்ணம்மாள் மற்றும் பெரியாரின் உறவுப் பெண்கள் வைக்கம் போராட்டத்தில் பங்கேற்றனர். 1924 – மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நாகம்மையார் வைக்கத்திலேயே தங்கிப் போராட்டத்தை நடத்தினார்.

நாகம்மையார் 'தீண்டப்படாத' பிரிவைச் சார்ந்தவர் அல்ல; எனவே அவர் வீதியில் அனுமதிக்கப்பட்டார். தன்னுடன் 'தீண்டப்படாத' ஜாதிப் பெண்ணையும் அழைத்துச் சென்றதால் அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. வீதியில் நடந்து சென்று கோயிலுக்குள்ளும் நுழைந்து வழிபாடு நடத்த முயலுகிறார். உடன் தீண்டப்படாத ஜாதிப் பெண்ணை அழைத்து வந்ததால் எதிர்த்தார்கள். பிறகு கோயிலுக்கு வெளியே 'தீண்டப்படாத' ஜாதிப் பெண்ணுடன் சேர்ந்து வழிபாடு செய்தார். தனக்குக் கிடைத்த வீதிகளில் நடக்கும் உரிமையைக் கோயில் வழிபாட்டு உரிமையையும் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்துக்குப் பயன்படுத்தினார்



நாகம்மையார்.

நாகம்மையார் 'சாணார்' பெண்களுடன் கோயில் வழிபாட்டுக்குப் போகும்போது ஒரு பார்ப்பனர் பெரிய தடியை வைத்துத் தடுத்தார். அந்தப் பார்ப்பனர் பேச்சுத் திறனும் கேட்கும் திறனும் இழந்தவர். அருகில் நின்ற பார்ப்பனர்களுடன் நாகம்மையார் எதிர்வாதம் செய்தார். அடுத்த நாள் கொட்டும் மழையில் நனைந்து கொண்டு 3 மணி நேரம் போராட்டம் நடத்தினார்.

அடுத்த நாள் (1924, ஜூலை 13) நாகம்மையார், பெரியார் சகோதரி கண்ணம்மாள், பெரியார் சித்தி, பி.கே. கல்யாணி அம்மாள் தடையை மீறி போராடச் சென்றபோது காவலர்கள் தடுத்து நிறுத்தி, "பாம்புகள் இருக்கின்றன; போனால் கடிக்கும்" என்று மிரட்டினார்கள். எங்களைக் கடிக்காது என்று கூறி நாகம்மையார் மறியல் செய்தார்.


பெரியார் சிறைப்பட்டிருந்த காலத்தில் நாகம்மையார் வீடு திரும்பி விடவில்லை. ஒரு முறை நாகம்மையாரும் கைதாகி 'ரிமாண்ட்' செய்யப்பட்டுப் பெரும் துன்பத்தை அனுபவித்தார்.

**தகவல் : பழ. அதியமான் எழுதிய 'வைக்கம் போராட்டம்' நூல்**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# வரலாற்றுக் களஞ்சியமாக வந்துள்ள நூல்

**ஏற்கனவே 'தம்பிக்கு' என்னும் தலைப்பில் ஒரு கடித இலக்கியத்தைப் படைத்தளித்த தோழர் சரவணகுமார் அவர்கள் அதன் தொடர்ச்சியாகத் தம்பிக்கு பாகம் 2 என்றதொரு நூலினைப் படைத்தளித்துள்ளார்.**




*நேரு தனது மூன்றாண்டு சிறைவாசத்தின் போது தன் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள் தான் உலக வரலாற்றுப் பார்வை ( Glimpses of World History) என்ற நூலாக வெளிவந்தது. அது உலகில் தோன்றிய நாடுகளின், மக்களின் வரலாறுகளைக் கூறியது. கிரேக்கம் போன்ற நாடுகளைப் பற்றி மட்டுமல்ல மங்கோலிய அரசுகள், செங்கிஸ்கான் போன்றோரையும் காட்சிப்படுத்தும் ஓர் நூல் அது. அண்ணாவின் 'தம்பிக்கு...' கலைஞரின் 'உடன்பிறப்பே' போன்ற கடித இலக்கியங்கள் தமிழக மக்களுக்கு மிகுந்த அறிமுகம் பெற்றவை .*

*2007 ஆம் ஆண்டு நடந்த திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி மாநாட்டினை ஒட்டி நவம்பர் மாதம் ஏறத்தாழ 20 கடிதங்களை முரசொலி ஏட்டில் எழுதி இருந்தார் கலைஞர். அது உலக அரசியலைத் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்களுக்கு அறிமுகம் செய்யும் ஓர் முன்னெடுப்பு.*

*இவற்றைப் போலவே தான் நமது தோழர் சரவணகுமார் அவர்களின் இந்த முயற்சியும் ஆகும். மதத்தில் முன்வைக்கும் கருத்தாக்கங்கள் சில கருத்தியல் அடிப்படைகளைக் கொண்டே விளங்குகிறது.*

*அறநிலையத்துறை, ஆளுநரின் அடாவடிகள், ஆளுநர் பதவி, அனைத்துச் சாதியினருக்கும் அர்ச்சகராகும் உரிமை, ஆகமங்கள், ஸ்மார்த்தர்களின் வேதநெறி மீறல்கள், பார்ப்பனர்கள் / தமிழர்கள் என்ற பெருந்தலைப்புகளுக்குள் நிகழ் கால நடப்புகளையும் உள்ளிணைத்தே அனைத்துக் கடிதங்களும் எழுதப்பட்டுள்ளன.*

**வேத சடங்குகள் நெருப்போடு தொடர்புடைய அக்னிச் சடங்குகள். ஒவ்வொரு செயலுக்கும் தீயுண்டாக்கி வளர்த்து அதில் பொருள்களை அர்ப்பணிக்க வேண்டும். தீயில் போடும் பொருள்கள் இறைவனைச் சென்றடைகின்றன என்பது நம்பிக்கை. ஆனால் ஆகம முறைகளில் தீக்கு வேலை இல்லை. வழிபடும் தெய்வத்தின் முன்னர் வழிபாட்டு பொருள்களைக் காட்டிவிட்டு எடுத்துக் கொள்ளலாம். வேத சடங்குகளில் கடவுளின் உருவத்திற்கு இடமில்லை. எல்லாக் கடவுளுக்கும் நெருப்பு தான் இடைத்தரகர். ஆனால் ஆகம வழிபாட்டில் உருவ வணக்கம் (அது குறியீடாகவோ படிமமாகவோ எப்படியும் இருக்கலாம்) கட்டாயமானது.**

*சிலப்பதிகாரத்தில் இருந்து சிறுமலை பற்றிய குறிப்புகள், கண்ணகி கோட்டத்தை 18 ஆண்டுகள் தேடிக் கண்டுபிடித்த தஞ்சை கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் சி.கோவிந்தராசனார் சந்திப்பு எனப் பல தகவல்களில் விரவிக் கிடக்கின்றன.*

*இலவசம் பற்றி குறை கூறிப் பேசுவோரை நோக்கி ஒரு கடிதம். தட்சணை, தானம், இலவசம், ஓசி என்பது கடிதத் தலைப்பு. சொற்கள் அனைத்தும் ஒரு பொருட் பன்மொழி வகைச் சொற்கள். பார்ப்பனருக்குக் கொடையாக அளிக்கப்பட்ட பிரமதேயம், மங்கலங்கள் என்பவற்றைப் பற்றியும், பல்வகை தட்சணைக் கொள்ளைகளைப் பற்றியும் கூறுகிறது இந்தக் கடிதம்.*

*அறநிலையத்துறை உருவான வரலாற்றை விளக்கும் மற்றொரு கடிதம். கடிதத்தின் தொடக்கப் பகுதியிலேயே தூத்துக்குடி வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய வந்த ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஸ்ரீ வைகுண்டம் கோயிலுக்குச் சென்ற போது "காசை உண்டியலில் போடாதீர்கள்! அர்ச்சகர் தட்டில் போடுங்கள்" என்று கூறிய செய்தியை நினைவு படுத்தித் தான் தொடங்குகிறார். பார்ப்பனக் கழுகுகள் உயர உயரப் பறந்தாலும் தட்சணை என்ற செத்த எலிகள் தான் கண்ணுக்குப் புலப்படும் போலும்! ஆய்வாளர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களின் 'இடைக்கால தமிழக வரலாற்றில் கோவில் திருட்டுகள்' எனும் நூலில் இருந்து கி.பி. 900 முதற்கொண்டு நடந்த திருட்டுகளின் பட்டியலைக் கல்வெட்டு ஆதாரங்களுடன் பட்டியல் படுத்தியுள்ளதை எடுத்துக் காட்டுகிறார். அதன் பின்னர் தான் 1817 இல் கிழக்கின் கம்பெனி அரசு கோவில்களையும் மடங்களையும் ஒழுங்குபடுத்தும் சட்டம் Madras Regulation 18 17, Madras Endowment and Escheats Regulation 1817 இயற்றப்பட்டது என்பதைக் கூறுகிறார். (அதுவே 1969 இல் Tamilnadu Endowment and Escheats Regulation என்று பெயர் மாற்றப்பட்டது). தொடர்ச்சியாக நீதிக்கட்சி 1923இல் நிறைவேற்றிய ஆலய பரிபாலன மசோதா 1925 இல் அமைக்கப்பட்ட இந்து சமய அறநிலைய வாரியம் ஆகியவை உருவாக்கப்பட்டதையும், அதில் நீதிக்கட்சி முதலமைச்சர் பனகல் அரசரின் ராஜதந்திர நடவடிக்கையும் குறிப்பிடுகிறார். ஆலய பரிபாலன மசோதா நிறைவேற்றுகிற வேலையில் பனகல் அரசர், பின்னர் மத்திய அமைச்சராகவும் காஷ்மீர் ஆளுநராகவும் விளங்கிய என்.கோபாலசாமி அய்யங்கார் என்னும் ஐ.சி.எஸ். அதிகாரியைச் சிறப்பு உறுப்பினராக (Expert Member) என்று நியமித்ததோடு, அந்த வாரியத்திற்கும் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி டி. சதாசிவம் ஐயரைத் தலைவராக நியமித்து எதிர்ப்புகளை மட்டுப்படுத்திய சிறப்பினையும் எடுத்துக் கூறுகிறார்.*

*செந்தமிழ்ச்செல்வியில் பேராசிரியர் கா.சு. பிள்ளை எழுதியுள்ள 'சுமார்த்தக் கலப்பால் சிவாலயங்களில் நிகழும் இடையூறுகள்' எனும் கட்டுரை தமிழக சமய வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு ஆவணம். அது குறித்தும் அதன் செய்திகள் குறித்தும் விரிவாக அந்தக் கடிதத்தில் பதிவிட்டுள்ளார். அதுபோலவே 1940 இல் பேராசிரியர் கா.சு பிள்ளை அவர்களின் 'தமிழர் சமயம்' என்ற தலைப்பில் எழுதிய நூலில், குலபிறப்பு நூல் நம்பிக்கை வணக்கம் முறை கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு பெருந்தன நெறி தமிழர் சமயம். கலப்பு மணத்துக்கு இடையூறான விதிகளைச் சட்ட வாயிலாக ஒழித்தல் வேண்டும்.*

*சீர்திருத்தங்களை எல்லாம் ஒருங்கு சேர்த்து ஜாதிக் குறைவு நீக்கும் சட்டம் ஒன்று இந்திய சட்டசபையில் நிறைவேற்றுவதற்குத் தக்க கிளர்ச்சி செய்து அதனை முற்றுப் பெறுவித்தல் வேண்டும், போன்ற செய்திகளை எடுத்து விளக்கி இருக்கிறது அந்தக் கட்டுரை.*

*அடுத்து தமிழ்நாடு பெயர் சூட்டலைப் பற்றிய விரிவான கடிதம் ஒன்று.*

*அதில் 1956 ஜனவரியில் காங்கிரஸ் அல்லாத அனைத்துக் கட்சிகள் கூடி சென்னை ராஜ்ஜியம் என்ற பெயரை நீக்கித் தமிழ்நாடு என்று இந்த நாட்டிற்குப் பெயர் அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை 1956 ஜனவரியில் நிறைவேற்றியது -அதே கோரிக்கையோடு 1956 மார்ச் 27 அன்று சென்னை நேப்பியர் பூங்காவில் நடந்த சர்வ கட்சி கூட்டம் – அந்த கோரிக்கையை வலியுறுத்தி 1956 ஜூலை மாதம் 27 ஆம் நாள் முதல் விருதுநகர் சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் மேற்கொண்ட செய்திகள் – 21.10.1956 அன்று தமிழ்நாடு பெயர் சூட்டல் தொடர்பாக அண்ணா அவர்கள் எழுதிய தம்பிக்கு கடிதம் – இவை அனைத்திற்கும் முன்னால் 25 10 1955 அன்று தமிழ், தமிழ்நாடு என்கிற பெயர் கூட இந்த நாட்டிற்கு சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாத நிலை ஏற்பட்டு விடுமானால் பிறகு என்னுடைய கழகத்தினுடைய பின்பற்றும் நண்பர்களுடைய வாழ்வு எதற்காக இருக்க வேண்டும்? என்ற கேள்வியோடு வெளிவந்த பெரியாரின் அறிக்கை – எனப் பல்வேறு வரலாற்றுச் செய்திகளை நினைவூட்டுகிறது இந்தக் கடிதம்.*

*அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் உரிமை பற்றிய ஒரு கடிதம். அதில் அடிநாள் சுயமரியாதை வீரராகிய நாகர்கோயில் வழக்குரைஞர் பி. சிதம்பரம் பிள்ளை அவர்கள் எழுதிய நூலில் மேற்கோள் காட்டி இருக்கிற பி.டி. சீனிவாச ஐயங்காரின் கூற்றுகளையும் இந்தக் கடிதத்தில் எடுத்துரைக்கிறார்.*

*"சுமிருதிகளின் உற்பத்தி வேதமாகும் ஆகமங்களின் உற்பத்தி திராவிடம் ஆகும் இந்த வேறுபாடு மிகவும் தலையானது. இரு பிறப்பாளர் (பார்ப்பனர்) மட்டுமே வேதங்களைப் பயிலலாம். ஆனால், அதாவது ஒருவன் தாழ்த்தப்பட்ட வகுப்பினனாக இருந்தாலும் சண்டாளனாக இருந்தாலும் ஆகமங்களைக் கற்றுக் கொள்ளும் உரிமை அவனுக்கு உண்டு. வேதங்களையும் சுமிருதிகளையும் பயில்வதில் இருப்பதைப் போன்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை" என்கிறார் பி.டி. சீனிவாசய்யங்கார்.*

*மேலும் இன்றைய இந்து சமயம் ஏறத்தாழ முற்றிலும் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது. வேதங்களைக் கொஞ்சம் கூட அடிப்படையாகக் கொண்டது அல்ல. மதத்தில் ஊறியது இந்தியா. அந்த மதம் ஆகம மதமே ஒழிய வேத மதம் அன்று .*

*ஆகமம் என்ற சொல்லின் பொருள் தொன்று தொட்டு வந்தது என்பதாகும். ஆகமம் என்பதற்கு முன்னோர் மொழி ஆப்த வசனம் என்றும் பொருள் உள்ளது.*

*வேத சடங்குகள் நெருப்போடு தொடர்புடைய அக்னிச் சடங்குகள். ஒவ்வொரு செயலுக்கும் தீயுண்டாக்கி வளர்த்து அதில் பொருள்களை அர்ப்பணிக்க வேண்டும். தீயில் போடும் பொருள்கள் இறைவனைச் சென்றடைகின்றன என்பது நம்பிக்கை. ஆனால் ஆகம முறைகளில் தீக்கு வேலை இல்லை. வழிபடும் தெய்வத்தின் முன்னர் வழிபாட்டு பொருள்களைக் காட்டிவிட்டு எடுத்துக் கொள்ளலாம். வேத சடங்குகளில் கடவுளின் உருவத்திற்கு இடமில்லை. எல்லாக் கடவுளுக்கும் நெருப்பு தான் இடைத்தரகர். ஆனால் ஆகம வழிபாட்டில் உருவ வணக்கம் (அது குறியீடாகவோ படிமமாகவோ எப்படியும் இருக்கலாம்) கட்டாயமானது.*

*இன்னும் ஏராளமான ஆதாரங்களை முனைவர் க. நெடுஞ்செழியன், தொ. பரமசிவம் போன்றோரின் நூல்களில் இருந்தும் ஆதாரம் காட்டி விளக்குகிறது இந்தக் கடிதம்.*

*ஆளுநர் பதவி, கோவில் நுழைவுப் போராட்டங்கள், 'தூய தமிழர்களான' ம.பொ.சி, சீமான் போன்றோரின் உள்ளீடற்ற வாதங்களின் பொய்மை எனப் பல்வேறு செய்திகளைப் பகிர்ந்து கொள்ளும் இந்தக் கடிதங்கள் – வடிவில் கடிதங்கள் ஆக இருந்தாலும் தமிழ்நாட்டின், தமிழ்நாட்டு மக்களின், தமிழ்நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளை முன் வைத்து பல்வேறு வகையில் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளும் தன்மையன. த மி ழ ர் நலனில், தமிழ்நாட்டு உரிமைகளில், தமிழ் மக்களின் உரிமைகளில் அக்கறையுள்ள அனைவரும் படித்தறிய வேண்டிய ஏராளமான செய்திகளை உள்ளடக்கிய ஆதாரக் களஞ்சியமே இந்த நூல். அனைவரும் வாங்குங்கள்!*

**கொளத்தூர் மணி,**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

**புரட்சிப் பெரியார் முழக்கம்**
ஆண்டு சந்தா ரூ.300/–
அய்ந்தாண்டு சந்தா ரூ.1500/–
தொடர்புக்கு : ஆசிரியர், 15. தோழமை. வெங்கடேஸ்வரா நகர். பெருங்குடி. சென்னை – 96, பேச 8973341377

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 13, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran